**எலஹெர பிரதேச சபை - 2022**

**---------------------------------------------**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எலஹெர பிரதேசபிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, தேறிய சொத்துக்கள்/ உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் எலஹெர பிரதேசபிரதேச சபையின் 2022 திசெம்பா 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

இந்நிதிக்கூற்றுக்களை உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள்

மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன்

முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்

- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் கீழே குறிப்பிடப்படுகின்ற தேவைகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்ததாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவையின் பிரகாரம், முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

### 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பாக கணக்காய்வு அவதானிப்புகள்
### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உடன்படிக்கையை இரத்துச்செய்த கருத்திட்டங்களில் பூர்த்தி செய்த விகிதத்தை அடிப்படையாகக் கொண்டு நிதிக்கூற்றுகளிற்கு இனங்காணாததால் 5 கட்டிட நிர்மாணங்களின் பெறுமதி ரூபா 19,241,649 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதென. | வெளியீட்டு விகிதத்தின் அடிப்படையில் நடைமுறை வேலைகள், சொத்துக்களாக குறிப்பிடப்பட வேண்டும். |
| (ஆ) | உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களின் EG 3.1 பிரகாரம் காணப்படும் சொத்துக்களை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 8,926,938 ஆன செலவுகள் நடைமுறையல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | காட்டியுள்ள செலவுகள் சொத்துக்கள் மேம்படுத்துவதற்கானதாகயால் மூலதனமாக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதி தியபெதும வாராந்த சந்தை 16 கடையறைகளின் பின்னர் இனங்கண்ட கட்டிட பெறுமதி ரூபா 11,688,658 இனை நிதிக்கூற்றுக்களில் காண்பித்திருக்கவில்லை. | - மேற்படி - | நிலையான சொத்துக்களிற்காக மேற்கொள்ளப்படும் மேம்படுத்தல் நிலையான சொத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும் |
| (ஈ) | பாதையொன்றில் தளப்பரப்பு கற்களை பரப்புதல் மற்றும் மதகு ஒன்றை தயாரித்தலிற்கான கிரயப் பெறுமதி ரூபா 4,974,060 ஆன போதும், அப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் ரூபா 5,566,724 ஆக ரூபா 592,664 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - | பட்டியல்கள் பிரகாரம் பெறுமதிகள் கணக்கீடு செய்யப்படவில்லை என அவதானிக்கப்பட்டது. சரியான பெறுமதிகள் கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டில் நிதி கூற்றுக்களுடன் சமர்ப்பித்திருந்த நடைமுறையல்ல சொத்துக்கள் அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதி மற்றும் அதற்குரிய நிலையான சொத்து பதிவேடுகளில் காட்டப்பட்டுள்ள பெறுமதிகளிற்கிடையில் ரூபா 378,544 ஆன இணக்கமின்மை ஒன்றானது. | சரி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுவதென. | சரியான பெறுமதிகளை இனங்கண்டு நேரொத்த அறிக்கைகள் அல்லது பதிவேடுகளை சீராக்க வேண்டும். |
| (ஆ) | குறிப்பு இலக்கம் 19 பிரகாரம் குறுங்கால செலுத்த வேண்டியவைகளின் பெறுமதி மற்றும் அதற்குரிய அட்டவணைகள் பிரகாரமான பெறுமதிகளிற்கு இடையில் ரூபா 1,220,669 ஆன இணக்கமின்மை ஒன்றானது. | - மேற்படி - | - மேற்படி - |
| (இ) | நிதி கூற்றுக்களுடன் சமர்ப்பித்துள்ள பெற வேண்டிய வியாபார வரி, வாடகை மற்றும் நீதிமன்ற தண்டப்பண வருமானங்களிற்குரிய அட்டவணைகள் மற்றும் பேரேட்டு கணக்கு மீதிகளிற்கிடையில் ரூபா 2,732,400 ஆன இணக்கமின்மை ஒன்றானது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஈ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான உரிமை மாற்றங்கள் | - மேற்படி - | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| மீதான கூற்றில் கணக்கீட்டு கொள்கை மாற்றம்/ கடந்த காலப்பகுதியின் தவறாக திரண்ட மிகையிலிருந்து ரூபா 2,077,173 தொகை குறைக்கப்பட்டிருந்த போதும், கடந்த காலப் பகுதிக்கான தவறுகள் குறிப்பிடப்படும் அட்டவணைகள் அப் பெறுமதி ரூபா 1,770,851 ஆனதில் ரூபா 306,322 ஆன இணக்கமின்மை ஒன்றானது. | | |
| (உ) மீளாய்வாண்டில் நிகழ்ச்சி திட்ட இலக்கம் 07 இற்குரியதாக மொத்த செலவு ரூபா 6,528,105 ஆன போதும், விரிவான வருமான் கூற்றில் அப்பெறுமதி ரூபா 5,859,012 ஆனதில் ரூபா 669,093 ஆன இணக்கமின்மை ஒன்றானது. | - மேற்படி - | - மேற்படி - |
| (ஊ) மீளாய்வாண்டில் அட்டவணை பிரகாரம் நூலகப் புத்தக பெறுமதி ரூபா 2,599,427 ஆன போதும், நிதிக்கூற்றுக்கள் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 3,814,051 ஆனதில் ரூபா 1,214,624 ஆன இணக்கமின்மை ஒன்றானது. | - மேற்படி - | - மேற்படி - |
| (எ) மீளாய்வாண்டில் பாதைகள், மதகுகள் மற்றும் பாலங்கள் பெறுமானத் தேய்வு அட்டவணை பிரகாரம் ரூபா 4,661,276 ஆன போதும், கணக்கீடு செய்யப்பட்டிருந்த பெறுமானத் தேய்வின் அளவு ரூபாய் 5,824,754 ஆனதில் ரூபா 1,163,478 ஆன இணக்கமின்மை ஒன்றானது. | - மேற்படி - | - மேற்படி - |

### 1.6.3 கணக்காய்விற்கான ஆவண சான்றுகள் இல்லாமை

| **கணக்காய்வு அவதானிப்புக்கள்** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| ரூபா 69,494,416 பெறுமதியான 04 கணக்கு விடயங்களிற்குரிய மீதி உறுதிப்படுத்தல்கள், அட்டவணைகள், துணை ஏடுகள் சமர்ப்பிக்காததன் மீது கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுதி செய்ய அல்லது ஏற்றுக் கொள்ள முடியவில்லை. | முறையாக நாளாதுவரையாக்கி 2023 ஆண்டு முதல் பேணிச் செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கியதென. | மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ள தேவையான தகவல்களை பேணிக் கொள்ள வேண்டும். |

**1.7 இணக்கமின்மைகள்**

**1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணக்காமை சந்தர்ப்பங்கள் பின்வருமாறு காட்டப்படுகின்றது.

| **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான தொடர்பு** | **இணக்கமின்மை** | **சபையின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| **(அ) விதி மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகள்** | | | |
| 2018 ஆகஸ்ட் 29 திகதிய இலக்கம் 2086/15 கொண்ட இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தல் பிரதேச சபைகளிற்காக வெளியிடப்பட்ட விதி இலக்கம் 1.1 | ஒரு பிரதேச செயலக பிரிவுடன் கூடிய பிரதேச சபையொன்றின் தவிசாளரினால் பிரதேச சபையின் கடமை பிரயாணத்திற்காக செலவிட விட வேண்டிய எரிபொருள் எல்லை ஒரு மாதத்திற்கு 400 லிற்றர் டீசல் அளவைவிட அதிகரித்த அளவாக இருக்கக் கூடாத போதும், ஏழு மாதங்களில் எல்லையை விஞ்சி மேலதிக எரிபொருள் 1,034 லிற்றர் டீசல் பயன்படுத்தப்பட்டு இருந்தது. | மாவட்டத்திற்கு வெளியில் பயணிப்பதற்காக மேலதிக எரிபொருள் பெற்றுக் கொண்டுள்ளதாக . | சுற்றறிக்கை ஏற்பாடுகள் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும் |
| **(ஆ) திறைசேரி சுற்றறிக்கை** | | | |
| 2022 செப்டம்பர் 30 திகதிய அரச நிதி சுற்றறிக்கை இலக்கம் 364(3) இன் 05 | சந்தர்ப்பம் 04 இன் போது ரூபா 133,524 ஆன பெறுமதி சேர் வரி செலுத்தப்பட்டிருந்த போதும், அது தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளரிற்கு அறிவித்திருக்கவில்லை. | பெறுமதி சேர் வரி செலுத்தியது தொடர்பாக உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அறிவித்து பரிசோதித்து செலுத்த நடவடிகை எடுக்க அறிவுறுத்தல் வழங்கியதென. | - மேற்படி - |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 5,172,484 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் வருமானத்தை விஞ்சிய செலவினம் ரூபா 14,043,160 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்கள் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பில் இடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | மதிப்பிடப்பட்ட வருமானம் | பில் போடப்பட்ட வருமானம் | சேர்க்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம | பில் போடப்பட்ட வருமானம | சேர்க்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 1,781,498 | 1,936,107 | 1,515,898 | 420,209 | 1,547,528 | 1,712,542 | 1,477,562 | 955,542 |
| (ii) | வாடகை | 34,495,000 | 3,838,015 | 641,796 | 3,196,219 | 8,951,200 | 9,013,981 | 6,939,800 | 6,240,659 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 745,250 | 1,914,662 | 1,451,042 | 463,620 | 547,750 | 337,830 | 446,275 | 30,000 |
| (iv) | ஏனைய வருமானம் | 29,259,936 | 30,015,271 | 14,391,738 | 15,623,533 | 22,000,000 | 18,000,960 | 26,859,275 | 10,419,246 |
| | | 66,281,684 | 37,704,055 | 18,000,474 | 19,703,581 | 33,046,478 | 29,065,313 | 35,722,912 | 17,645,447 |

#### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை தொடர்பான அவதானிப்பு பின்வருமாறு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரியும் வரியும்** | | |
| 2004 ஆண்டின் பின்னர் வீதவரி மதிப்பிட்டு இருக்காததுடன், அம் மதிப்பீட்டை அடிப்படையாகக் கொண்டு வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டிற்காக தற்போது தகவல்கள் பெறப்பட்டு வருகின்றதென. | நாளாதுவரையாக வீதவரி மதிப்பிட வேண்டும். |
| **(ஆ) வாடகை** | | |
| கடையறைகள் தொடர்பாக பிரதேச சபை சட்டத்தின் 159 பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காத காரணத்தால் நிலுவை வாடகை தொகை 03 ஆண்டுகளிற்கு அதிக காலமாக முன்கொண்டு வரப்பட்டிருந்தது. | நிலுவையை எதிர்காலத்தில் அறவிட நடவடிக்கை எடுப்பதென. | நிலுவை வருமானங்களை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**(இ) ஏனைய வருமானம்**

| | | |
|---|---|---|
| மாகாண சபை பிரதான செயலாளர் மற்றும் ஏனைய அதிகாரிகளிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியன்று பெற வேண்டியதாக இருந்த நீதிமன்ற தண்டப்பண வருமானம் ரூபா 13,796,187 தொகை மற்றும் முத்திரை கட்டண வருமானம் ரூபா 1,686,900 ஆனது. | பதில் வழங்கப்படவில்லை. | கிடைக்க வேண்டிய தொகையை அழைப்பித்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தால் விதிக்கப்பட்டுள்ள பணிகளை மேற்கொள்ளல்**

பிரதேசசபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொதுப் பாவனை சேவைகள், பொது வீதி தொடர்பான விடயங்களை முறைமைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல், பொதுமக்களின் நல்வாழ்வு, வசதிகள், நலன்புரி என்பனவாக சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **கைவிடப்பட்ட கடமைகள்** | | |
| உள்ளூராட்சி நிறுவனங்களை வலுவூட்டும் நிகழ்சித் திட்டத்தின் கீழ் உடன்பட்ட பெறுமதி ரூபா 19,807,679 ஆன 03 கடமைகளை ஆரம்பித்து அதற்காக ரூபா 4,130,061 தொகை செலவிட்டிருந்த போதும் அக் கருத்திட்டங்கள் மேற்கொள்வது கைவிடப்பட்டிருந்தது. | 03/2022 இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் கீழ் அரச செலவுகளை கட்டுப்படுத்திய காரணத்தால் இரத்துச் செய்ய நடவடிக்கை மேற்கொண்டுள்ளதென. | சபையினால் முன்னுரிமை பிரகாரம் கருத்திட்டங்களை இனங்கண்டு செயற்படுத்த வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தியபெதும பழைய வாராந்த சந்தை வளவில் வியாபார கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதனை குறித்த ஒப்பந்ததாரரினால் புறக்கணிக்கப்பட்டு இருந்ததுடன், கருத்திட்டத்திற்காக தெரிவு செய்திருந்த ஒப்பந்ததார நிறுவனம் 2021 திசெம்பர் 07 திகதி சபைக்கு வழங்கியிருந்த ரூபா 1,774,889 ஆன செயலாற்றுகை காப்பு மற்றும் ரூபா 7,099,554 ஆன முற்பண காப்பு போலியான காரணத்தால் சபைக்கு அவற்றை பணமாக்கிக் கொள்ள முடியாதுள்ளது. அவ்வாறே ஆரம்ப ஒப்பந்தப் பெறுமதி ரூபா 35,497,770 | போலியான தகவல்களை சமரப்பித்தமை தொடர்பாக பொலீஸில் முறைபாடொன்றை முன்வைத்துள்ளதுடன், அறவிட வேண்டியுள்ள மீதிகள் தொடர்பாக இறுதி அறிக்கை பிரகாரம் அந்த நிறுவனத்திற்கு உள்ள உள்ளூராட்சி திணைக்களத்தின் ஏனைய கருத்திட்டங்களில் காணப்படும் நிதி ஏற்பாடுகளிலிருந்து இந்த நட்டத்தை செலுத்த | உடன்படிக்கை கைச்சாத்திட முன்னர் குறித்த ஆவணங்களின் சரியான தன்மையை உறுதி செய்து கொண்ட பின்னர் உடன்படிக்கை செய்து கொடுப்பனவு செய்ய வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆன இக் கருத்திட்ட பணிகளிற்காக ஆரம்ப ஒப்பந்ததாரரிற்கு செலுத்தி இருந்த தொகை ரூபா 12,088,813 ஆனதுடன், எஞ்சிய வேலைகளிற்காக விலை அதிகரிப்பின் மீது மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 56,338,901 ஆனது. | நிறுவனம் இணங்கியுள்ளதென. | |

## 3.3 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **ஊழியர் கடன்** | | |
| பிரதேச சபையில் கடமையில் ஈடுபட்டிருந்த கடமை தடைசெய்த இரண்டு அலுவலர்களிடமிருந்து ரூபா 129,677 பெறுமதி மற்றும் கடமையை விட்டுச் சென்ற நான்கு அலுவலர்களிடமிருந்து ரூபா 20,530 பெறுமியான இடர் கடன் மற்றும் விழா முற்பணம், 02 ஆண்டுகளிற்கும் 09 ஆண்டுகளிற்கும் இடையிலான காலமாக அறவிட நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவை தொகையை அறவிட நடவடிக்கை எடுத்து வருவதென. | நிலுவை ஊழயர் கடனை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.4 ஒப்பந்த நிர்வாக குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உள்ளூராட்சி நிறுவனங்களை வலுவூட்டும் தேசிய நிகழ்சித் திட்டத்தின் (மூலதன) கீழ் ரூபா 19,807,676 ஒப்பந்த பெறுமதியான 03 கருத்திட்டங்களை ஆரம்பித்துள்ளதுடன், 2021.12.31 திகதியளவில் இக் கருத்திட்டங்களிற்காக ரூபா 3,725,110 தொகை செலவிட்டிருந்த போதும், ஒப்பந்தங்களை இரத்துச் செய்யப்பட்டிருந்தது. | ஒப்பந்ததாரரின் உடன்பாட்டின் மீது ஒப்பந்தம் இரத்துச் செய்யப்பட்டுள்ளதெனவும், கருத்திட்டங்களின் எஞ்சிய வேலைகளை பூர்த்தி செய்வதற்குரியதாக 2023 ஆண்டில் மதிப்பீடு தயாரித்து உள்ளூராட்சி அமைச்சிற்கு அனுப்பியுள்ளதென. | அனைத்து கருத்திட்டங்களையும் குறித்த காலப் பகுதியினுள் பூர்த்தி செய்ய நடடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **ஆளணி பயன்பாடு** | | |
| பிரதேச சபையில் இரண்டாம் மட்டத்திற்குரிய 04 அபிவிருத்தி உத்தியோகத்தர் வெற்றிடங்களும், 01 முகாமைத்துவ உதவியாளரும், மற்றும் தொழிநுட்ப அலுவலர் பதிவி மற்றும் ஆரம்ப மட்டத்திற்குரிய ஆளணியில் 09 வெற்றிடங்களும் காணப்பட்டன. | இது தொடர்பாக மும்மாதமாக அனுப்பப்படும் ஆளணி வெற்றிட தகவல் அறிக்கை ஊடாக அறிவித்துள்ளதாக. | ஊழியர் வெற்றிடங்களை நிரப்பிக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் |